**மேனிலை இரண்டாமாண்டு**

**வரலாறு**

**மாதிரி வினாத்தாள் 1**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண்: 90**

**பகுதி – அ**

Iசரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 20 x 1 = 20

1. பிளாசிப் போர் நடைபெற்ற ஆண்டு

(அ) 1757

(ஆ) 1764

(இ) 1772

(ஈ) 1777

2. காரன் வாலிஸ் பிரபு அறிமுகப்படுத்தியது

(அ) மகல்வாரி முறை

(ஆ) நிலையான நிலவரித் திட்டம்

(இ) இரயத்துவாரி முறை

(ஈ) ஜாகீர்தாரி முறை

3. ஹேஸ்டிங்ஸ் பிரபு நேபாளத்தின் மீது போர் தொடுத்த ஆண்டு

(அ) 1814

(ஆ) 1815

(இ) 1816

(ஈ) 1817

4. எந்த மாகாண ஆட்சிக்கு லாரன்ஸ் சகோதரர்கள் சேவையாற்றினார்கள்?

(அ) பர்மா

(ஆ) பஞ்சாப்

(இ) வங்காளம்

(ஈ) மைசூர்

5. விதவைகள் மறுமணச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு

(அ) 1846

(ஆ) 1856

(இ) 1870

(ஈ) 1891

6. கலெக்டர் ஜாக்சன் கட்டபொம்மனை எங்கு வந்து சந்திக்கச் சொல்லி ஆணை பிறப்பித்தார்?

(அ) மதுரை

(ஆ) பாஞ்சாலங்குறிச்சி

(இ) இராமநாதபுரம்

(ஈ) ஸ்ரீவில்லிபுத்தூர்

7. பின்வருவபவர்களில் 1857 ஆம் ஆண்டுக் கலகத்தை முதல் இந்திய விடுதலைப்போர் எனக் கருதியவர் யார்?

(அ) சர் ஜான் லாரன்ஸ்

(ஆ) வீர சவார்கர்

(இ) எஸ்.என்.சென்

(ஈ) ஆர்.சி.மஜூம்தார்

8. பின்வருவனவற்றுள் பெரியார் தொடங்காத பத்திரிகை எது?

(அ) குடியரசு

(ஆ) புரட்சி

(இ) விடுதலை

(ஈ) சுயராஜ்யா

9. இந்திய தேசியக் காங்கிரசைத் தோற்றுவித்தவர்

(அ) டபிள்யூ.சி.பானர்ஜி

(ஆ) ஏ.ஓ.ஹியூம்

(இ) மகாத்மா காந்தி

(ஈ) நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்

10. இந்திய ஒன்றியத்தில் சேர மறுத்த அரசு

(அ) ஹைதராபாத்

(ஆ) மைசூர்

(இ) ஜெய்ப்பூர்

(ஈ) திருவாங்கூர்

11. மெடிரா மற்றும் அசோர் தீவுகளைக் கண்டுபிடித்தவர்

(அ) ஹென்றி

(ஆ) பார்த்தலோமியாடயஸ்

(இ) கொலம்பஸ்

(ஈ) மெகல்லன்

12. பயிர் சுழற்சி முறையை அறிமுகப்படுத்தியவர்

(அ) ஹார்வே

(ஆ) டவுன்ஷெண்ட்

(இ) மெக்காடம்

(ஈ) ஹார்கிரீவஸ்

13. ஆட்டோமன் துருக்கியர்கள் கான்ஸ்டான்டிநோபிளைக் கைப்பற்றிய ஆண்டு

(அ) 1453

(ஆ) 1533

(இ) 1543

(ஈ) 1443

14. 'சமூக ஒப்பந்தம்' என்ற நூலின் ஆசிரியர்

(அ) ரூசோ

(ஆ) வால்டேர்

(இ) மாண்டஸ்கியூ

(ஈ) டி. ஆலம்பர்ட்

15. பன்னாட்டுக் கழகம் நிறுவப்பட்ட ஆண்டு

(அ) 1920

(ஆ) 1921

(இ) 1925

(ஈ) 1927

16. நான்காம் ஆங்கில மைசூர் போர் நடைபெற்ற ஆண்டு

(அ) 1790

(ஆ) 1792

(இ) 1795

(ஈ) 1799

17. சாரதா சட்டம் பெண்களின் திருமணத்திற்கான குறைந்த பட்ச வயதை________ ஆண்டுகளாக உயர்த்தியது.

(அ) 16

(ஆ) 14

(இ) 21

(ஈ) 18

18. அன்னி பெசன்ட் அம்மையார் தன்னாட்சி இயக்கத்தைத் தொடங்கிய இடம்

(அ) சென்னை

(ஆ) பஞ்சாப்

(இ) வங்காளம்

(ஈ) மகாராஷ்டிரம்

19. தொலைநோக்கியைக் கண்டறிந்தவர்

(அ) கோபர் நிகஸ்

(ஆ) கலிலியோ

(இ) நியூட்டன்

(ஈ) கெப்ளர்

20. பன்னாட்டுக் கழகத்தின் தலைமையிடம்

(அ) திஹேக்

(ஆ) ஜெனீவா

(இ) ஜெர்மனி

(ஈ) துருக்கி

## பகுதி – II

**$7 \times 2 = 14$**

*எவையேனும் ஏழு வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க வேண்டும். அவற்றில் வினா எண் 30 க்குக் கட்டாயம் விடையளிக்க வேண்டும்.*

21. *பிட் இந்தியச்சட்டம்*
22. *பசீன் உடன்படிக்கை*
23. *பர்தா முறை*
24. *கொழுப்புத் தடவப்பட்ட துப்பாக்கித் தோட்டாக்கள்*
25. *இந்திய தேசியக் காங்கிரஸ்*
26. *தண்டி யாத்திரை*
27. *மறுமலர்ச்சியின் பொருள்*
28. *பாஸ்டன் தேநீர் விருந்து*
29. *ரூசோ*
30. *வெர்சேல்ஸ் உடன்படிக்கை.*

## பகுதி – III

**$7 \times 3 = 21$**

*எவையேனும் ஏழு வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க வேண்டும். அவற்றில் வினா எண் 40 க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.*

31. ஒழுங்குமுறைச் சட்டத்தின் முக்கிய விதிமுறைகள் யாவை?
32. பிண்டாரிகளை ஒழிக்க ஹேஸ்டிங்ஸ் பிரபு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?
33. வாரிசு இழப்புக் கொள்கையின் கருத்து மற்றும் நடைமுறை பற்றி எழுதுக.
34. இந்தியக் கைத்தொழில்கள் குறித்து குறிப்பு எழுதுக.
35. 1857 ஆம் ஆண்டு கலகத்தின் விளைவுகளை ஆய்க.
36. மிதவாதிகளின் கோரிக்கைகள் பற்றி ஒரு குறிப்பு வரைக.
37. சுதேசி இயக்கத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துக.

38. பிரெஞ்சுப் புரட்சிக்கு பிரெஞ்சு சிந்தனையாளர்களின் பங்களிப்பை ஆய்க.

39. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்க.

40. ஐ.நா.வின் நோக்கங்களைக் குறிப்பிடுக.

## பகுதி – IV

$7 \times 5 = 35$

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

41. வாரன் ஹேஸ்டிங்ஸின் சீர்திருத்தங்களைத் தொகுத்துக் கூறுக.

(அல்லது)

பெண்டிங் பிரபு "சமூக சீர்திருத்தங்கள் காலத்தைத்" தொடங்கி வைத்தார் - கருத்துக் கூறுக.

42. 1857 ஆம் ஆண்டு கலகத்துக்கான காரணங்கள் யாவை?

(அல்லது)

இராஜாராம் மோகன்ராய் இந்திய மறுமலர்ச்சியின் தந்தை நிறுவுக.

43. இந்திய விடுதலை இயக்கத்தில் மகாத்மா காந்தியின் பங்கு குறித்து மதிப்பிடுக

(அல்லது)

விடுதலை இயக்கத்தில் தமிழ்நாட்டின் பங்கினை ஆய்க.

44. தொழிற்புரட்சியின் நன்மை, தீமைகளை விவரி.

(அல்லது)

அமெரிக்க விடுதலைப் போருக்கு வித்திட்ட நிகழ்ச்சிகளை ஆய்க.

45. தமிழ்நாட்டில் நீதிக்கட்சியின் சாதனைகளை ஆய்க.

(அல்லது)

"ஜவஹர்லால் நேரு நவீன இந்தியாவின் சிற்பி எனக் கருதப்படுகிறார்" – கருத்துக் கூறுக.

46. பன்னாட்டுக் கழகத்தின் தோல்விக்கான காரணங்களை ஆய்க.

(அல்லது)

உலக அமைதியைக் காப்பதில் ஐ. நா. சபையின் பங்கினை மதிப்பிடுக.

47. இந்திய வரைபடத்தில் வெல்லெஸ்லி பிரபுவின் பேரரசில் கீழ்க்காணும் ஐந்து இடங்களைக் குறிப்பிடுக.

(i) அயோத்தி (ii) ஹைதராபாத் (iii) கொல்கத்தா

(iv) சென்னை (v) வங்காளம்

(அல்லது)

1920 முதல் 1950 வரை நடைபெற்ற விடுதலைப் போர் நிகழ்வுகளில் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிட்டுக் காலக்கோடு வரைக.